**இப்பாகமுவ பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஜுன் 24 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இப்பாகமுவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 24 காணி மற்றும் கட்டடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை. | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மதிபிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | உரிய சொத்துக்களை மதிப்பிட்டு நிலையான சொத்துக்கள் ஆவணத்தை முறையாக புதுப்பிப்பதாக தயவுடன் அறியத் தருகிறேன். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகளுக்கு இணங்க நிர்மாணக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 42,599,857 தொகையாக இருந்த போதிலும், ரூபா 15,819,846 பெறுமதியான தொகை மாத்திரமே கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு சந்தர்ப்பத்தில் கடன்கொடுத்தோர் புதிவேடு புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை . |
| (இ) | மெல்சிரிபுர பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளுக்கு உரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய முற்கொடுப்பனவு தொகையான ரூபா 3,703,596 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | சரியான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 13 கணக்குகளுக்கு உரிய நிதிக்கூற்று மீதிகள் மற்றும் ஆவணங்களின் மீதிகள் இடையே ரூபா 18,287,863 பெறுமதியான இணக்கமின்மை காணப்பட்டது. | மீதிகளின் வேறுபாட்டை ஒப்பிட்டு கணக்கை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிவேடுகளின் மீதிகளைச் செய்யாமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் உருவான வேறுபாடுகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (உ) | நிதி நிலைமை தொடர்பான கூற்றில் 2019 திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் மற்றும் பி.ச. 07 படிவத்தின் பிரகாரம் நிலுவை வருமானம் ஆகியவற்றுக்கிடையே ரூபா 434,636 பெறுமதியான வேறுபாடு காணப்பட்டது | உரிய மீதிகளின் வேறுபாட்டை ஒப்பிட்டு கணக்கை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பி.ச. 07 சரி செய்ய அறிவுறுத்தினேன். |
| (ஊ) | ரூபா 65,365,501 தொகை பெறுமதியான 07 கணக்குகளுக்கு உரிய ஆவணங்கள், உப ஆவணங்கள் மற்றும் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாததால் கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் மெய்மையாய்வு செய்யவோ / சரி பார்க்கவோ முடியவில்லை. | நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதி செய்யும் சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இறுதிக்கணக்கில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் உள்ளிட்ட உப ஆவணங்களை 2020 இறுதிக் கணக்கில் வழங்குவதாகவும் ஆவணங்களைப் புதுப்பிப்பதாகவும் தயவுடன் அறியத் தருகிறேன். |
| (எ) | மொத்தம் ரூபா 204,000 பெறுமதியான 03 கொடுப்பனவு பற்றுச் சீட்டுகள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | அனைத்து கொடுப்பனவு ஆவணங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மை கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 132 (ஏ) | அமைச்சரின் முன் அனுமதியில்லாமல் தனியார் ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற செயலமர்வொன்றிற்கு ரூபா 175,310 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. | சபை நிதியை, இலக்குகளை நிறைவேற்றும் விதத்தில் பொருளாதார ரீதியில், செயலாற்றல் மற்றும் பயனுள்ள விதத்தில் செலவழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | வரவு செலவுத் திட்டம் மூலம் பயிற்சிக்காக பணம் ஒதுக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 5 (7) | முறையான உள்ளக கணக்காய்வு முறையொன்று பேணப்படுவது தலைவரால் உறுதிப்படுத்தப்பட வில்லை. | விதிகள், நிதிப்பிரமாணம் மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்துக்கிணங்க முறையான உள்ளக கணக்காய்வு பிரிவொன்று பேணப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 570,571 | வைப்பு செய்யப்பட்ட நாளில் இருந்து 02 ஆண்டுகளைக் கடந்த ரூபா 5,288,014 தொகை பெறுமதியான வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 02 ஆண்டுகளைக் கடந்த வருமானமாக எடுக்கக் கூடிய வைப்பு மீதிகளை இனங்கண்டு நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 39,197,138 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 80,054,719 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமானம் | 2019 ஆம் ஆண்டு | | | | 2018 ஆம் ஆண்டு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| I. வீதவரியும் வரியும் | 4,014 | 6,697 | 4,606 | 5,280 | 4,259 | 7,207 | 4,440 | 6,054 |
| II. வாடகை | 13,885 | 13,468 | 12,436 | 2,330 | 14,636 | 12,618 | 12,771 | 2,009 |
| III. அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | - | 1,205 | - | - | - | 1,316 | | - |
| IV. ஏனைய வருமானம் | 152,512 | 146,431 | 126,519 | 27,270 | 171,620 | 185,546 | 89,038 | 119,603 |
| மொத்தம் | 170,411 | 167,801 | 143,561 | 34,880 | 190,515 | 206,687 | 106,249 | 127,666 |

### 2.2.2 வீத வரிகள் மற்றும் வரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 4,933,871 தொகை பெறுமதியான வீதவரிகள் மற்றும் ஏக்கர் வரிகள் மீதியில் ரூபா 3,166,337 பெறுமதியான தொகை ஒரு ஆண்டுக்கும் அதிகமான காலத்துக்கு உரியது. | பிரதேச சபை சட்டம் மற்றும் விதிகள் பிரகாரம் வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருங்காலத்தில் உரிய அனைத்து தரப்பினருக்கும் அறியத் தந்து, காணப்படும் நிலுவை வீதவரிகளை அறவிட பிரதேச சபை சட்டத்தின் 158 (1) அ, அ(ஆ) மற்றும் 1988 நிதி மற்றும் நிர்வாகம் விதி 32-42 பிரகாரம் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத் தருகிறேன். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய ரூபா 2,330,593 தொகை பெறுமதியான வாடகை மீதியில் ரூபா 1,543,693 தொகை பல ஆண்டுகளாக இருந்து வரும் சொத்துக்களை குத்தகைக்கு விட்ட சந்தர்ப்பங்கள் 32 இற்கு உரியவை ஆகும். | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை மீதியை அறவிட ஒப்பந்தப் பிணையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.4 அனுமதிப்பத்திர கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி நிர்வாகம்) 59 ஆம் விதியின் பிரகாரம் வியாபாரம் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபை விதிக்கமைய செயற்பட வேண்டும். | கணக்காய்வின் போது சுட்டிக் காட்டப்பட்ட விதத்தில் 2019 ஆம் ஆண்டுக்காக மேற்கூறப்பட்டவற்றுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்காத ஆய்வறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து டிசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,800,000மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 17,421,396 ஆகும். | நிலுவை மீதியை அறவிட்டு பயனுறுதி வாய்ந்த மக்கள் சேவையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் 2019.12.31 ஆகும் போது நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்கு மாத்திரம் அறவிடப்பட உள்ளதோடு ஏனைய அனைத்து தொகைகளும் அறவிடப்பட்டுள்ளன என்பதை தயவுடன் அறியத் தருகிறேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) வரவு செலவுத் திட்டமிடப்பட்ட பணிகள் பூர்த்தி செய்யப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டமிடப்பட்ட ரூபா 14,000,000 பெறுமதியான 58 பணிகள் | வரவு செலவுத் திட்டமிடப்பட்ட பணிகளைப் பூர்த்தி செய்து பொது மக்கள் | வரவு செலவுத் திட்ட ஆவணத்தைத் தயாரிக்கும் போது பல்வேறு இயக்கங்கள் மற்றும் சபை அமைச்சர்களின் |

| | | |
|---|---|---|
| பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சேவைகளை பயனுள்ள விதத்தில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆலோசனைகளைப் பெற்று உப ஆவணங்களைத் தயாரித்த போதிலும் திடீரென செய்ய வேண்டிய வேலைகள் வந்ததால் உப ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட பணிகளைச் செய்ய முடியவில்லை. |

**(ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்துக்காக ரூபா 6,000,000 பெறுமதியான தொகையைச் செலவழித்து 03 ஏக்கர் 15.5 பர்ச்சஸ் அளவைக் கொண்ட காணியொன்றைக் கொள்வனவு செய்திருந்த போதிலும் ஆண்டு தோறும் சேகரிக்கப்படும் 3360 தொன் அளவிலான கழிவுகள் வகை பிரிக்கப்படாமல் தனியார் இடமொன்றில் புதைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. | கழிவுகளை வகை பிரித்து உக்கும் மற்றும் உக்காத கழிவுகளை பயனுள்ள விதத்தில் முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | மொத்த திண்மக் கழிவுப் பொருள் மத்திய நிலையம் ஒன்றை ஒரே தடவையில் நிர்மாணித்து முடிக்க சபை நிதியத்தால் செலவழிக்க வேண்டி நேரும் நிதியின் பற்றாக்குறையால் காபன் உரத் தயாரிப்பை மேற்கொள்ளத் தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நிதியைக் கோரி உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டில் ரூபா 693,412 தொகையை செலவழித்து நிர்மாணிக்கப்பட்ட ஹிரிபிடிய மீன் கடையை வருமானம் ஈட்ட பயன்படுத்தியிருக்கவில்லை. | சபை நிதியை பயனுள்ள வேலைகளைச் செய்ய பயன்படுத்த வேண்டும். | ஹிரிபிடிய மீன் கடையை நிர்மாணித்த சந்தர்ப்பத்தில் வேறு மீன் கடை இருக்காத காரணத்தால் இது நிர்மாணிக்கப்பட்ட போதிலும் விலைமனுக் கோரிய வேளையில் இந்த மீன் கடையை எவரும் வாங்கவில்லை என்பதை அறியத் தருகிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதி கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதியில் 2020 ஏப்ரல் 30 வரை அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 31,398,387 பெறுமதியான தொகையாகக் காணப்பட்டது. | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை குத்தகை வாடகை மற்றும் கடை வாடகையில் ரூபா 34,420 தொகை அறவிடப்பட்டுள்ளது. |
| (இ) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதி செலுத்தப்பட வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதியில் ஒரு ஆண்டுக்கும் அதிகமான காலமாக காணப்படும் மீதி ரூபா 12,474,071 ஆக இருந்தது. | செலுத்த வேண்டிய கடன் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய வைப்பு வருமானத்துக்கான வைப்புகள் மற்றும் விலைமனுக் வைப்பு மீதிகள் வரும் ஆண்டுகளில் விலைமனுக் கோரல் வருமானங்களை ஈடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் அதிகப்படியான ஊழியர்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | அனுமதிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியில் குழுவில 19 வெற்றிடங்கள் காணப்பட்டதோடு அமைய/ மாற்று / ஒப்பந்த அடிப்படையிலான 12 ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார்கள். | அத்தியாவசியமான வெற்றிடங்களைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனுமதிக்கப்பட்ட சாரதிகளின் எண்ணிக்கை 06 மாத்திரம் ஆன போதிலும் சபைக்கு சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை 16 ஆகும். அனுமதிக்கப்பட்ட தகனசாலை பொறுப்பாளரின் எண்ணிக்கை 01 ஆன போதிலும், சபைக்கு சொந்தமான தகனசாலை களின் எண்ணிக்கை 02 ஆகும். ஓய்வு தினங்களில் பணி புரிய ஒழுங்கான விதத்தில் மாற்று ஆயுர்வேத பெண் வைத்தியர் ஒருவர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். |
| (ii) | 03 ஆண்டுகள் தொடக்கம் 07 ஆண்டுகள் வரையான காலத்துக்குள் அறவிடப்படாத ரூபா 135,069 தொகை பெறுமதியான 03 ஊழியர் கடன் மீதிகள் இருந்தன. | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரண்டு அதிகாரிகளிடம் இருந்து ரூபா 8,300 பெறுமதியான தொகையை ஓய்வூதிய நன்கொடை மற்றும் மரண பணிக்கொடை ஆகியவற்றில் இருந்து அறவிட தீர்மானிக்கப் பட்டுள்ளது. ரூபா 126,769 பெறுமதியான மீதி தொடர்பாக கடிதம் மூலம் அறியத் தரப்பட்டுள்ளது. |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மெல்சிரிபுர பேரூந்து நிலையத்தின் கடைகளை முற்கொடுப்பனவு முறையில் வழங்கிய வேளையில் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட வில்லை என்பதோடு 2018 பெப்ரவரி 09 இல் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் பிரகாரம் 03 மாதங்களுக்குள் எஞ்சிய முற்கொடுப்பனவு தொகையைச் செலுத்தா விட்டால் மீண்டும் விலைமனுக் கோர குத்தகைக்கு வழங்குபவருக்கு அதிகாரம் உள்ள போதிலும், அவ்வாறு செய்ய நடவடிக்கை எடுக்காததால் ரூபா 3,703,596 பெறுமதியான தொகை அறவிடப்பட வேண்டி காணப்பட்டது. | ஒப்பந்தப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய தரப்பினருக்கு தொடர்ச்சியாக இது தொடர்பாக அறியத் தந்துள்ளதோடு வருங்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுத்து நிலுவைத் தொகையை அறவிடுவதாக தயவுடன் அறியத் தருகிறேன். |

## 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஹிரிபிடிய சந்தையின் முன்னால் களுகல்ல பாதையின் இடப்புறமாக அமைந்திருக்கும் 06 கடைகளுக்காக குத்தகைதாரர்கள் உரிமை கோரியுள்ள போதிலும், அந்தக் கடைகளின் உரித்தைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபை சொத்துக்களைத் தீர்த்து முறையான விதத்தில் குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த 06 கடைகளின் உரித்தை வருங்காலத்தில் பெற்றுக் கொண்டு சபைக்கு உரிய வருமானத்தைப் பெற நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத் தருகிறேன். |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.6.1 சொத்துகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 6,000,000 தொகை பெறுமதியான 03 ஏக்கர் 15 பேர்ச் அளவான காணியைச் சூழ பாதுகாப்பு வேலி அமைக்கப்படாததால் காணியிலுள்ள தென்னைகளின் பலன்களை சபை இழந்திருந்தது. | சபையின் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 வரவு செலவுத் திட்ட ஆவணத்தில் இந்தக் காணியில் பாதுகாப்பு வேலியை அமைக்கும் விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

### 3.6.2 கையேற்கப்படாத சொத்துகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 13,233,000 தொகை பெறுமதியான 03 வாகனங்களைக் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த 03 வாகனங்களையும் உடனடியாக கையேற்கத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக தயவுடன் அறியத் தருகிறேன். |

### 3.6.3 செயலற்ற சொத்துகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டில் தெயட கிருள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இப்பாகமுவ வாரச் சந்தை செயலற்றுக் காணப்பட்டது. | சபைக்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களையும் பயனுறுதி வாய்ந்த விதத்தில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | இப்பாகமுவ வாரச் சந்தையை தெயட கிருள திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய சந்தைக் கட்டிடத்துக்குக் கொண்டு செல்ல முடியாத காரணம் பழைய சந்தைக் காணியின் உரிமை தொடர்பாக உச்ச நீதிமன்றம் உட்பட 03 நீதி மன்றங்களில் வழக்கு விசாரணை மேற் கொள்ளப்படுவதால் ஆகும். |
| (ஆ) | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 13,075,000 தொகை பெறுமதியான கழி பவுசர் மற்றும் கம்பெக்டர் ஆகியவை செயலற்றுக் காணப்பட்டன. | பயனுள்ள விதத்தில் பயன்படுத்த இயலாவிட்டால் தேவையுள்ள நிறுவனத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயற்திட்டமொன்றை வகுத்து மலசலக் கழிவுகளை அகற்றக் கூடிய இடமொன்றுக்கான நிதியைப் பெற தீர்மானிக்கப்பட்டுள்ளது. திண்மக் கழிவு மத்திய நிலையத்தைத் திறந்த பின்னர் கம்பெக்டரை பயன்படுத்தலாம் என்பதை தயவுடன் அறியத் தருகிறேன். |

### 3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தாபன விதிக்கோவையில் ix ஆம் பந்தியில் முதலாம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1990 யூன் 05 ஆம் திகதிய மாகாண | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள், சுற்றறிக்கைகளுக்கு அமைய செயற்பட வேண்டும். | தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கைக்கு மாற்றமாக என்ற போதிலும் அரசாங்கத்துக்கு நட்டம் இல்லாமல் என்பதை அறியத் |

சபை அமைச்சின் செயலாளரது சுற்றறிக்கை 3 (ஆ) விதிமுறை களுக்கு மாறாக 2017 ஆம் ஆண்டில் இருந்து 2018 ஆம் ஆண்டின் பெப்ரவரி 26 வரை இப்பாகமுவ, கனேவத்த பிரதேச செயலாளரால் கிடைக்கப் பெற்ற நிர்வாகச் செலவுகளில் 25% ஐ சபை நிதிக்குச் செலுத்தி எஞ்சிய 75% ஆன ரூபா 943,842 பெறுமதியான தொகையை சபையில் கடமை புரியும் செயற்குழுவின் 19 உறுப்பினருக்கும் சபை தீர்மானத்தின் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

தருவதோடு உரிய கடமையை நிறைவேற்றுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்த தொகையை உரிய தரப்பினரிடம் செலுத்தியதாக தயவுடன் அறியத் தருகிறேன்.